Women's Entrepreneurship and Contributions to Household Economic Well-being in Batticaloa District, Sri Lanka: Evidence from the Kaluvankerny–02 Grama Niladhari Division

Mrs.Kirushikkah Sasikanth[1], Mrs. Paheerathy Moses[2]
[1]*MPhil Research Scholar in Sociology, Faculty of Graduate Studies, Eastern University, Sri Lanka*
[2]*Head & Senior Lecture, Department of Sociology & Anthropology, Eastern University, Sri Lanka*

Abstract

Women's economic participation plays an important role in improving household livelihoods and strengthening household economic well-being in rural communities in Sri Lanka. In particular, women's entrepreneurial activities can contribute to household economies through self-employment, small-scale businesses, income generation, savings, and meeting household needs. However, although women engage in entrepreneurial activities, the sustainability of these activities, their contribution to household income, savings, asset ownership, and women's participation in household economic decision-making require further investigation at the rural level. Against this background, this study sociologically examines the contribution of women's entrepreneurial activities to household economic well-being in the Kaluvankerny–02 Grama Niladhari Division of Batticaloa District, Sri Lanka.A mixed-methods research approach integrating quantitative and qualitative methods was employed. For the quantitative component, 150 female beneficiaries were selected, while qualitative data were collected through in-depth interviews, key informant interviews, and focus group discussions. Quantitative data were analysed using SPSS, based on percentages, tables, and graphical presentations, while qualitative data were analysed thematically.The findings indicate that women's entrepreneurial and self-employment activities have made a positive contribution to household economic well-being. Prior to participating in development interventions, 78% of women reported that their household monthly income was below Rs. 15,000, while 58% reported an increase in their household monthly income after participating in such interventions. Furthermore, although 43% of women were engaged in self-employment, 57% remained unemployed. Similarly, 56% of women reported having savings, whereas only 20% reported ownership of assets. These findings demonstrate that, although women's entrepreneurial activities have contributed positively to household income and livelihoods, they have not yet developed into sustainable employment opportunities or comprehensive economic empowerment for all women.The study further identifies market access, continuous vocational training, institutional support, transportation, communication, and women's decision-making power as key factors requiring further strengthening to enhance women's entrepreneurial activities and household economic well-being. Therefore, strengthening these areas through appropriate development interventions is essential for promoting sustainable women's entrepreneurship and improving household economic security in rural communities.

Keywords: *Women, Entrepreneurship, Household Economic Well-being, Livelihoods, Self-employment, Economic Empowerment, Development Interventions, Kaluvankerny–02.*

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களின் தொழில்முனைவும் குடும்பப் பொருளாதாரநலனுக்கான பங்களிப்புகளும்: களுவன்கேணி– 02 கிராமசேவகர் பிரிவிலிருந்து கிடைத்த சான்றுகள்

கிருஷிகா. ச[1] ,பகீரதி. மோ[2]

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

[1]சமூகவியல் முதுதத்துவமாணிஆய்வாளர்,பட்டக்கற்கைகள் பீடம்,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
[2]துறைத்தலைவர் மற்றும் சிரேஷ்டவிரிவுரையாளர்,சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்:

இலங்கையின் கிராமப்புறசமூகங்களில் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்புகுடும்பவாழ்வாதாரத்தைமேம்படுத்துவதிலும் குடும்பத்தின் பொருளாதாரநலனைவலுப்படுத்துவதிலும் முக்கியப் பங்குவகிக்கின்றது. குறிப்பாக,பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் சுயதொழில்,சிறுதொழில்,வருமானஉருவாக்கம்,சேமிப்புமற்றும் குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் போன்றவழிகளில் குடும்பப் பொருளாதாரத்திற்குபங்களிக்கக்கூடியவையாகஉள்ளன. இருப்பினும்,பெண்கள் தொழில்முனைவோர் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும்,அவற்றின் தொடர்ச்சியானதன்மை,குடும்பவருமானத்திற்கானபங்களிப்பு,சேமிப்பு,சொத்துரிமைமற்றும் பொருளாதாரமுடிவெடுப்பில் பெண்களின் பங்குஆகியவைகிராமப்புறமட்டத்தில் மேலும் ஆராயப்படவேண்டியுள்ளன. இப்பின்னணியில், இவ்வாய்வுமட்டக்களப்புமாவட்டத்தின் களுவன்கேணி–02 கிராமசேவகர் பிரிவில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனில் ஏற்படுத்தும் பங்களிப்பைசமூகவியல் நோக்கில் ஆராய்கின்றது.இவ்வாய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் அணுகுமுறைகளைஒருங்கிணைத்தகலப்புஆய்வுமுறைபயன்படுத்தப்பட்டது. அளவுசார் தரவுகளுக்காக 150 பெண் பயனாளர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன்,பண்புசார் தரவுகளுக்காகஆழமானநேர்காணல்கள்,முக்கியதகவலளிப்போர் நேர்காணல்கள் மற்றும் குழுக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அளவுசார் தரவுகள் Microsoft Excel மூலம் சதவீதங்கள்,அட்டவணைகள் மற்றும் வரைபடங்களின் அடிப்படையில் பகுப்பாய்வுசெய்யப்பட்டன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் அடிப்படையில் பகுப்பாய்வுசெய்யப்பட்டன.ஆய்வின் முடிவுகள்,பெண்களின் தொழில்முனைவோர் மற்றும் சுயதொழில் நடவடிக்கைகள் குடும்பப் பொருளாதாரத்தில் நேர்மறையானபங்களிப்பைவழங்கியுள்ளதைக் காட்டுகின்றன. அபிவிருத்தித் தலையீடுகளில் பங்கேற்பதற்குமுன்னர் 78% பெண்களின் குடும்பமாதவருமானம் ரூ.15,000-க்கும் குறைவாக இருந்தநிலையில்,பங்கேற்புக்குப் பின்னர் 58% பெண்கள் தங்களதுகுடும்பமாதவருமானம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மேலும், 43% பெண்கள் சுயதொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், 57% பெண்கள் தொழிலின்றிகாணப்பட்டனர்.அதேவேளை, 56% பெண்களிடம் சேமிப்புப் பழக்கம் காணப்பட்டாலும்,சொத்துரிமை 20% மட்டுமேகாணப்பட்டது. எனவேபெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பவருமானம் மற்றும் வாழ்வாதாரத்தில் நேர்மறையானமாற்றத்தைஏற்படுத்தினாலும்,அவை இன்னும் அனைத்துபெண்களுக்கும் நிலையானதொழில் வாய்ப்புகளாகவும் முழுமையானபொருளாதாரஅதிகாரமளித்தலாகவும் மாறவில்லைஎன்பதைவெளிப்படுத்துகின்றன. குறிப்பாக,சந்தைஅணுகல்,தொடர்ச்சியானதொழிற்பயிற்சி,நிறுவனஆதரவு,போக்குவரத்து,தொடர்பாடல் மற்றும் பெண்களின் முடிவெடுக்கும் அதிகாரம் ஆகியவைபெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளையும் குடும்பப் பொருளாதாரநலனையும் மேலும் வலுப்படுத்தவேண்டியமுக்கியகாரணிகளாகஅடையாளம் காணப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்:பெண்கள்,தொழில்முனைவோர்,குடும்பப் பொருளாதாரநலன்,வாழ்வாதாரம், சுயதொழில்,பொருளாதாரமவலுவூட்டல்,அபிவிருத்தித் தலையீடுகள்,களுவன்கேணி–02

1. அறிமுகம்

பெண்களின் பொருளாதாரப் பங்கேற்புசமூகமற்றும் பொருளாதாரஅபிவிருத்தியின் முக்கியகருப்பொருளாகக்கருதப்படுகின்றது. ஒரு குடும்பத்தின் பொருளாதாரநலன் என்பதுகுடும்பவருமானத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை.

வேலைவாய்ப்பு,சுயதொழில்,சேமிப்பு,சொத்துரிமை,உற்பத்திவளங்களுக்கானஅணுகல்,குடும்பமுடிவெடுப்பில் பங்கேற்புமற்றும் எதிர்காலபொருளாதாரப் பாதுகாப்புஆகியவைகுடும்பப் பொருளாதாரநலனின் முக்கியஅம்சங்களாகும்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

இலங்கையில் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்புநீண்டகாலமாகஆண்களைவிடக் குறைவாகவேஉள்ளது. உலகவங்கியின் 2024 தெற்காசியஅபிவிருத்திஅறிக்கை, இலங்கையின் பெண் தொழிலாளர் பங்கேற்புவிகிதம் பிராந்தியமற்றும் உலகளாவியஒப்பீட்டில் குறிப்பிடத்தக்கசவால்களைஎதிர்கொள்வதைஎடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சூழலில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.குறிப்பாககிராமப்புறங்களில் முறையானவேலைவாய்ப்புகள் குறைவாக இருக்கும்போது,சிறுவணிகம்,வீட்டுத் தொழில்,உணவுஉற்பத்தி,தையல்,கால்நடைவளர்ப்பு,விவசாயம்,மீன்பிடிசார்ந்தநடவடிக்கைகள் மற்றும் சிறுவிற்பனைபோன்றசுயதொழில் நடவடிக்கைகள் பெண்களுக்குவருமானம் ஈட்டுவதற்கானமாற்றுவாய்ப்புகளைவழங்குகின்றன.

இலங்கையில் பெண்களால் நடத்தப்படும் தொழில்கள் பெரும்பாலும் சிறியமற்றும் முறைசாராதொழில்களாக இருப்பதுடன்,நிதிமற்றும் தொழில் விரிவாக்கத்திற்கானஅணுகல் முக்கியமானதடைகளாகஉள்ளன.IFC-யின் ஆய்வு,பெண்களின் முறையானசிறுமற்றும் நடுத்தரஅளவிலானதொழில் நிறுவனங்கள் (SME) உரிமைகுறைவாக இருப்பதையும்,பலபெண்கள் முறைசாராகுறுநிறுவனநிலையிலிருந்துவிரிவடைய முடியாமல் இருப்பதற்குநிதிமற்றும் தொழில் திறன் தொடர்பானதடைகள் காரணமாக இருப்பதையும் குறிப்பிடுகிறது.

சமீபத்தியUNDPஆய்வுகளும் பெண்கள் சொந்தமாகக் கொண்டநுண்,சிறுமற்றும் நடுத்தரஅளவிலானதொழில் நிறுவனங்கள் (MSME)-களுக்குநிதியைஅணுகுவதில் கட்டமைப்புமற்றும் நிறுவனரீதியானதடைகள் இருப்பதைஎடுத்துக்காட்டுகின்றன. கடன் பெறுவதற்கானகடுமையானநிபந்தனைகள்,அடமானத் தேவைகள்,வரையறுக்கப்பட்டவலையமைப்புமற்றும் நிதிநிறுவனங்களின் அணுகல் ஆகியவைபெண்களின் தொழில் வளர்ச்சியைகட்டுப்படுத்துகின்றன.

எனவே,பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகள் குடும்பப் பொருளாதாரநலனில் எந்தஅளவிற்குபங்களிக்கின்றனஎன்பதைஉள்ளூர் சமூகமட்டத்தில் ஆராய்வதுஅவசியமாகின்றது. இவ்வாய்வு இத்தேவையைகருத்தில் கொண்டுமட்டக்களப்புமாவட்டத்தின் களுவன்கேணி–02 கிராமசேவகர் பிரிவைமையமாகக் கொண்டுள்ளது.

2. ஆய்வுப் பிரச்சினை(Research Problem)

கிராமப்புறப் பெண்களின் பொருளாதாரநிலையைமேம்படுத்துவதற்காகஅரசமற்றும் அரசசார்பற்றநிறுவனங்களால் பல்வேறுஅபிவிருத்தித் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.தொழிற்பயிற்சி,வாழ்வாதாரஉதவி,சுயதொழில் ஊக்குவிப்பு,சிறுதொழில் உதவி,கடன்,சேமிப்புமற்றும் திறன் மேம்பாடுபோன்றநடவடிக்கைகள் பெண்களின் பொருளாதாரப் பங்கேற்பைஅதிகரிப்பதைநோக்கமாகக் கொண்டுள்ளன.

இருப்பினும், இத்திட்டங்களில் பங்கேற்கும் பெண்கள் அனைவரும் நிலையானதொழில்முனைவோர் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனராஎன்பதுகேள்விக்குரியவிடயமாகவேகாணப்படுகின்றது. மேலும்,பெண்கள் வருமானம் ஈட்டினாலும் அந்தவருமானம் குடும்பப் பொருளாதாரநலனாகஎவ்வாறுமாற்றமடைகின்றது,பெண்களிடம் சேமிப்புஉருவாகின்றதா,சொத்துரிமைஅதிகரிக்கின்றதா,குடும்பபொருளாதாரமுடிவெடுப்பில் பெண்களின் பங்குவலுப்படுகின்றதாஎன்பதும் ஆராயப்படவேண்டியுள்ளது.

களுவன்கேணி–02 பகுதியில் 43%பெண்கள் சுயதொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், 57% பெண்கள் தொழிலின்றிகாணப்பட்டனர்.மேலும்,திட்டங்களில் பங்கேற்பதற்குமுன்னர் 78%பெண்களின் குடும்பமாதவருமானம் ரூ.15,000-க்கும் குறைவாக இருந்தநிலையில்,பங்கேற்புக்குப் பின்னர் 58%பெண்கள் குடும்பவருமானம் அதிகரித்ததாகத் தெரிவித்தனர்.

அதேவேளை, 56% பெண்களிடம் சேமிப்புப் பழக்கம் காணப்பட்டாலும்,சொத்துரிமை 20%மட்டுமேகாணப்பட்டது. இதன் மூலம் வருமானஉருவாக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டாலும்,அதுமுழுமையானமற்றும் நிலையானபொருளாதாரஅதிகாரமளித்தலாகமாறுவதில் இடைவெளிகாணப்படுகின்றது.எனவேமட்டக்களப்புமாவட்டத்தின் களுவன்கேணி–02 கிராமஅலுவலர் பிரிவில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனுக்குபங்களிப்பைவழங்குகின்றன. இருப்பினும்,தொழில் பங்கேற்பின் குறைவு,தொழில்

தொடர்ச்சியின்மை,சந்தைமற்றும் நிதிஅணுகல்,குடும்பப் பொறுப்புகள்,பாலினச் சமூகக் கட்டுப்பாடுகள்,நிறுவனஆதரவின் வரம்புகள் மற்றும் குறைந்தசொத்துரிமைபோன்றகாரணிகள் இப்பங்களிப்பின் நிலைத்தன்மையைப் பாதிக்கின்றன. எனவே,பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனில் ஏற்படுத்தும் பங்களிப்பையும்,அந்தப் பங்களிப்பைவலுப்படுத்தும் மற்றும் கட்டுப்படுத்தும் காரணிகளையும் சமூகவியல் நோக்கில் ஆராய்வது இவ்வாய்வின் முக்கியப் பிரச்சினையாகும்.

3. ஆய்வின் நோக்கங்கள் (Research Objectives)

3.1 பிரதானநோக்கம்

களுவன்கேணி–02 கிராமசேவகர் பிரிவில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனுக்குவழங்கும் பங்களிப்பைசமூகவியல் நோக்கில் ஆராய்தல்.

3.2. உப நோக்கங்கள்

- பெண்களின் தொழில்முனைவோர் மற்றும் சுயதொழில் செயல்பாடுகளின் தன்மைமற்றும் நிலையைஅடையாளம் காணுதல்.
- பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பவருமானம் மற்றும் குடும்பவாழ்வாதாரமேம்பாட்டிற்குவழங்கும் பங்களிப்பைமதிப்பிடுதல்.
- பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகளின் மூலம் உருவாகும் சேமிப்பு,சொத்துரிமைமற்றும் குடும்பப் பொருளாதாரப் பாதுகாப்பின் நிலையைஆராய்தல்.
- பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகளின் தொடர்ச்சிமற்றும் நிலைத்தன்மையைப் பாதிக்கும் சமூக,பொருளாதாரமற்றும் நிறுவனகாரணிகளைஅடையாளம் காணுதல்.
- பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் மற்றும் குடும்பப் பொருளாதாரநலனைமேலும் வலுப்படுத்துவதற்கானபொருத்தமானபரிந்துரைகளைமுன்வைத்தல்.

4. ஆய்வுமுறைமையியல் (Research Methodology)

இவ்வாய்வில் கலப்புஆய்வுஅணுகுமுறை(Mixed Methods Approach)பயன்படுத்தப்பட்டது. அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் இணைந்துபயன்படுத்தப்பட்டதன் மூலம் பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளின் பொருளாதாரவிளைவுகளையும் சமூகஅனுபவங்களையும் ஒருங்கிணைத்துபுரிந்துகொள்ளமுடிந்தது.

4.1. தரவுசேகரிக்கும் முறைகள்

இவ்வாய்விற்காகஅளவுசார் மற்றும் பண்புசார் முறைகளைப் உள்ளடக்கியமுதன்மைமற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்கள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுசேகரிக்கும் முறைகளில் பண்புரீதியானஉத்திகளாக(qualitative tools) பிரதானதகவலாளிநேர்காணல் (Key Person Interviews(KPIs)),கட்டமைக்கப்பட்டநேர்காணல் (structured interview),மையக்குழுக்கலந்துரையாடல் முறைபோன்றஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அளவுரீதியானஉத்திகளாக(Quantitative tools)வினாக்கொத்துஅளவைகள் (Questionnaire surveys) பயன்படுத்தப்பட்டுள்ளன.அளவுசார் ஆய்விற்காக 150 பெண் பயனாளர்கள் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாய்வில் இரண்டாம் நிலைத்தரவுசேகரிக்கும் மூலங்களாகஆய்வுடன் சம்பந்தப்பட்டவிடயங்களைஉள்ளடக்கியவாறானநூல்கள்,சஞ்சிகைகள்,அறிக்கைகள்,சுற்றுநிரூபங்கள்,புள்ளிவிபரஅறிக்கைகள்,ஏற்கனவேவெளியிடப்பட்டஆய்வுகளின் உட்பரிமாணங்கள்,மற்றும் இணையத்தளம் என்பவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன.

4.2.தரவுப் பகுப்பாய்வு

அளவுசார் தரவுகள் Microsoft Excel மூலம் அதிர்வெண்,சதவீதம்,அட்டவணைகள் மற்றும் வரைபடங்களின் அடிப்படையில் பகுப்பாய்வுசெய்யப்பட்டன.

பண்புசார் தரவுகள் கருப்பொருள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு,பெண்களின் தொழில்முனைவோர் அனுபவங்கள்,குடும்பப் பொருளாதாரப் பங்களிப்பு,சவால்கள் மற்றும் நிறுவனஆதரவுபோன்றமுக்கியகருப்பொருட்கள் அடையாளம் காணப்பட்டன.

5. இலக்கியமீளாய்வு(Literature Review)

5.1. பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள்

பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் சமகாலஅபிவிருத்திஆய்வுகளில் முக்கியமானசமூக–பொருளாதாரக் கூறாகக் கருதப்படுகின்றன. குறிப்பாகவளர்ந்துவரும் நாடுகளில் பெண்களின் தொழில்முனைவுகுடும்பவருமானத்தைஉருவாக்குவதுடன்,வேலைவாய்ப்பு,வறுமைக் குறைப்பு,வாழ்வாதாரமேம்பாடுமற்றும் குடும்பநலனுக்கும் பங்களிக்கக்கூடியதாகஉள்ளது. இலங்கைச் சூழலில் பெண்கள் நாட்டின் மொத்தமக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களாக இருந்தாலும்,பொருளாதாரநடவடிக்கைகளிலும் தொழில்முனைவோர் நடவடிக்கைகளிலும் அவர்களின் பங்கேற்புஎதிர்பார்க்கப்படும் அளவில் இல்லை(De Silva & Wijewardene, 2019).

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பெண்களின் தொழில்முனைவுஎன்பதுமுறையானபெரியநிறுவனங்களைமட்டும் குறிக்காது சுயதொழில்,வீட்டைஅடிப்படையாகக் கொண்டதொழில்,சிறுவணிகம் மற்றும் வாழ்வாதாரநோக்கிலானதொழில்கள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது. சமீபத்திய இலங்கைஆய்வுஒன்று,பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் பலசந்தர்ப்பங்களில் முறைசாராதுறையுடன் தொடர்புடையதாகவும்,வளங்களின் பற்றாக்குறைமற்றும் சமூக–நிறுவனக் கட்டுப்பாடுகளின் மத்தியில் இயங்குவதாகவும் குறிப்பிடுகின்றது(Surangi, Wijetunge,& Samarakoon, 2025).

இக்கருத்துகளுவன்கேணி–02 பகுதியில் காணப்படும் பெண்களின் சுயதொழில் மற்றும் சிறுதொழில் நடவடிக்கைகளைப் புரிந்துகொள்வதற்குமுக்கியமானதாகும்.குறிப்பாககிராமப்புறப் பெண்களுக்குதொழில்முனைவோர் நடவடிக்கைகள் முறையானவேலைவாய்ப்பிற்குமாற்றுவாய்ப்பாகவும் குடும்பப் பொருளாதாரத்திற்குதுணைவருமானமாகவும் அமையக்கூடும்.

5.2. பெண்களின் தொழில்முனைவுமற்றும் குடும்பப் பொருளாதாரநலன்

பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளின் முக்கியமானவிளைவுகளில் ஒன்றுகுடும்பப் பொருளாதாரநலனில் ஏற்படும் மாற்றமாகும்.தொழில்முனைவோர் நடவடிக்கைகள் மூலம் உருவாகும் வருமானம் குடும்பஉணவு,கல்வி,சுகாதாரம்,வீட்டுவசதிமற்றும்
பிறஅத்தியாவசியதேவைகளுக்குபயன்படுத்தப்படுவதுடன்,சேமிப்பையும் அதிகரிக்கக்கூடும்.
பெண்களின் பொருளாதாரஈடுபாடுகுடும்பத்தின் நலனுக்குமட்டுமல்லாமல்,பரந்தசமூகமற்றும் பொருளாதாரவளர்ச்சிக்கும் முக்கியமானதுஎன இலங்கைதொடர்பான இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன(De Silva & Wijewardene, 2019).

இதேவேளை,பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளின் வெற்றியைவெறும் வருமானஅதிகரிப்பால் மட்டுமேஅளவிடமுடியாது. தொழில் தொடர்ச்சி,சேமிப்பு,சொத்துரிமை,வளங்களின் மீதானகட்டுப்பாடுமற்றும் குடும்பமுடிவெடுப்பில் பங்கேற்புஆகியவையும் பெண்களின் பொருளாதாரநலனின் முக்கியக் குறியீடுகளாகக் கருதப்படுகின்றன. எனவே, இவ்வாய்வில் குடும்பப் பொருளாதாரநலன் என்பதுவருமானம்,சேமிப்பு,சொத்துரிமை,வாழ்வாதாரமேம்பாடுமற்றும் பொருளாதாரப் பாதுகாப்புஆகியபலபரிமாணங்களைக் கொண்டதாகஅணுகப்படுகின்றது.

5.3. பெண்களின் சுயதொழில் மற்றும் சிறுதொழில்

கிராமப்புறச் சூழலில் முறையானவேலைவாய்ப்புகள் குறைவாக இருப்பதால்,சுயதொழில் பெண்களுக்குமுக்கியமானவருமானஉருவாக்கவாய்ப்பாகஅமைகின்றது. சிறுவணிகங்கள் மற்றும் வீட்டைஅடிப்படையாகக் கொண்டதொழில்கள் பெண்களுக்குகுடும்பப் பொறுப்புகளுடன் பொருளாதாரநடவடிக்கைகளைஒருங்கிணைக்கஉதவுகின்றன.

இலங்கையில் பெண்களால் நடத்தப்படும் தொழில்களில் கணிசமானபகுதிநுண்நிலைமற்றும் முறைசாராதொழில் மட்டத்தில் காணப்படுவதாக ஐகுஊ குறிப்பிடுகின்றது. பெண்கள் சொந்தமாகக் கொண்டமுறையானSMEs-ன் பங்குகுறைவாகவும்,பலபெண்கள் முறைசாராசிறுதொழில் நிலையிலிருந்துபெரியஅளவிலானதொழில்களாகவளர்வதில் நிதிமற்றும் வணிகத் திறன் தொடர்பானதடைகளைஎதிர்கொள்வதாகவும் அறிக்கைகுறிப்பிடுகிறது(IFC, 2020).

இதன் அடிப்படையில்,பெண்களின் சுயதொழில் ஆரம்பிப்பதுமட்டும் போதுமானதல்ல் தொழிலைதொடர்ந்துநடத்துவதற்கானநிதி,சந்தை,தொழில்நுட்பமற்றும் நிறுவனஆதரவும் அவசியமாகின்றது.

5.4. பெண்களின் தொழில்முனைவோர் வெற்றியைப் பாதிக்கும் தனிநபர் காரணிகள்

பெண்களின் தொழில்முனைவோர் வெற்றியைதனிநபர் திறன்கள்,மனித மூலதனம்,நிதித் திறன்,சமூகவலையமைப்பு,ஊக்கம் மற்றும் தொழில் அறிவுபோன்றகாரணிகள் பாதிக்கின்றன. De Silva மற்றும் Wijewardene (2019)மேற்கொண்ட இலங்கை இலக்கியமீளாய்வு,மனித மூலதனம்,சமூகக் கற்றல்,நிதித் திறன்,வலையமைப்புமற்றும் ஊக்கக் காரணிகள் பெண்களின் தொழில் செயல்திறனுடன் தொடர்புடையதாக இருப்பதைஅடையாளம் காட்டுகின்றது.

இதன் மூலம் பெண்களுக்குதொழிற்பயிற்சிவழங்குவதுமட்டுமல்லாமல்,கணக்கியல்,சந்தைப்படுத்தல்,நிதிமேலாண்மை,வணிகத் திட்டமிடல் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புபோன்றநடைமுறைத் திறன்களையும் மேம்படுத்துவதுஅவசியம் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகின்றது.

5.5. நிதிஅணுகல் மற்றும் பெண்களின் தொழில்முனைவு

பெண்களின் தொழில்முனைவோர் வளர்ச்சியில் நிதிஅணுகல் முக்கியமானகாரணியாகும்.ஆரம்பமுதலீடு,தொழில் விரிவாக்கம், மூலப்பொருள் கொள்முதல்,உற்பத்திமற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்குபோதுமானநிதிதேவைப்படுகின்றது.

UNDP-யின் 2025 ஆய்வு, இலங்கையில் பெண்கள் சொந்தமாகக் கொண்டMSME-கள் நிதியைஅணுகுவதில் கட்டமைப்புமற்றும் நிறுவனரீதியானதடைகளைஎதிர்கொள்வதாகக் குறிப்பிடுகின்றது. அடமானத் தேவைகள்,கடன் நிபந்தனைகள்,வரையறுக்கப்பட்டவலையமைப்புகள் மற்றும் நிதிநிறுவனங்களின் அணுகல் போன்றவைமுக்கியமானதடைகளாகஅடையாளம் காணப்பட்டுள்ளன(UNDP, 2025).

மேலும்,UNDP குறிப்பிடுவதுபோல்,பெண்கள் தொழில்முனைவோருக்குநிதிமட்டுமல்லாமல் நிதியியல் அறிவு,தொழில்முனைவோர் திறன்கள்,சந்தைஅணுகல்,வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுவலையமைப்புகள் ஆகியவையும் தேவைப்படுகின்றன(UNDP, 2025).

இவ்விடயம் களுவன்கேணி–02 பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளில் கடன்,சேமிப்புமற்றும் தொழில் விரிவாக்கம் ஆகியவற்றைஆராய்வதற்கானமுக்கியஅடிப்படையாகஅமைகின்றது.

5.6. சந்தைஅணுகல் மற்றும் தொழில்முனைவோர் நிலைத்தன்மை

தொழில் தொடங்குவதற்குஅப்பால்,தொழிலைத் தொடர்ந்துநடத்துவதற்குசந்தைஅணுகல் முக்கியமானதாகும்.பெண்களின் உற்பத்திப் பொருட்கள் உள்ளூர் சந்தையில் மட்டுமேவிற்பனைசெய்யப்படும்போது,தொழில் விரிவாக்கத்திற்கும் அதிகவருமானம் ஈட்டுவதற்கும் வரம்புகள் ஏற்படலாம்.

இலங்கையின் பெண்கள் தொழில்முனைவோர் தொடர்பானகொள்கைஆய்வுகள்,நிதிஅணுகலுடன் சந்தைமற்றும் தொழில்நுட்பஅணுகலும் பாலினஅடிப்படையிலானசவால்களைஎதிர்கொள்ளும் துறைகளாக இருப்பதைசுட்டிக்காட்டுகின்றன (OECD, 2021).

மேலும், இலங்கையில் பெண்கள் சொந்தமாகக் கொண்டSMEsதொடர்பானShanmugathas (2021) ஆய்வு,முறையானசந்தைப்படுத்தல் அறிவுகுறைவாக இருந்தபோதிலும் பெண்கள் தொழில்முனைவோர் சந்தைப்படுத்தல் நடைமுறைகளைப் பயன்படுத்திதங்கள் தொழில்களைமுன்னெடுத்துவருவதைகாட்டுகின்றது.

இதனால்,பெண்களுக்குசந்தைத் தகவல்,வாடிக்கையாளர் வலையமைப்பு,டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் பொருட்களின் தரமேம்பாடுபோன்றஆதரவுகள் வழங்கப்படுவதுதொழில் நிலைத்தன்மைக்குஉதவக்கூடும்.

5.7. குடும்பப் பொறுப்புகள் மற்றும் சமூக–கலாசாரகாரணிகள்

பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகளைகுடும்பமற்றும் சமூகச் சூழலிலிருந்துதனியாகப் புரிந்துகொள்ளமுடியாது. பெண்கள் தொழில் நடவடிக்கைகளுடன் குடும்பப் பராமரிப்பு,குழந்தைப் பராமரிப்பு,வீட்டுவேலைமற்றும் பிறகுடும்பப் பொறுப்புகளையும் மேற்கொள்ளவேண்டியநிலைகாணப்படுகின்றது. Rathnayaka மற்றும் Surangi (2022)நுவரெலியாமாவட்டத்தில் மேற்கொண்டஆய்வில்,குடும்பம் மற்றும் தொழிலைசமநிலைப்படுத்துதல்,பாலினப் பாகுபாடு,சமூக–கலாசாரஎதிர்பார்ப்புகள்,மனித மூலதனம் மற்றும் வணிகஅறிவுஆகியவைகிராமப்புறப் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகளில் தடைகளாக இருப்பதைஅடையாளம் கண்டனர்.

இதனால்,பெண்களின் தொழில் வெற்றியைதனிநபரின் முயற்சியால் மட்டும் விளக்கமுடியாது. குடும்பஆதரவு,சமூகஅங்கீகாரம் மற்றும் பால்நிலைப்பங்கீட்டின் தன்மைஆகியவையும் தொழில் தொடர்ச்சியைப் பாதிக்கின்றன.

5.8. பெண்களின் தொழில்முனைவுமற்றும் பொருளாதாரஅதிகாரமளித்தல்

பெண்களின் தொழில்முனைவுபொருளாதாரஅதிகாரமளித்தலுக்கானஒருமுக்கியவழியாகக் கருதப்படுகின்றது. வருமானம் ஈட்டுதல் பெண்களின் பொருளாதாரசுயாதீனத்தைஅதிகரிக்கலாம்.இருப்பினும்,வருமானம் ஈட்டுதல் மட்டும் முழுமையானபொருளாதாரஅதிகாரமளித்தலைஉறுதிசெய்யாது.

பெண்களுக்குவருமானம்

கிடைத்தாலும்,அந்தவருமானத்தைஎவ்வாறுபயன்படுத்துவது,சேமிப்பைஎவ்வாறுகட்டுப்படுத்துவது,சொத்துக்களைவைத்திருப்பதுமற்றும் குடும்பமுக்கியமுடிவுகளில் பங்கேற்பதுபோன்றஅம்சங்களில் பெண்களுக்குஅதிகாரம் இருக்கவேண்டும். 2025ஆம் ஆண்டின் இலங்கைப் பெண் தொழில்முனைவோர் தொடர்பானஆய்வு,பெண்களின் தொழில் வளர்ச்சியைப் புரிந்துகொள்ளநிறுவனஆதரவு,வளங்களுக்கானஅணுகல் மற்றும் சமூக–கலாசாரசூழலைஒருங்கிணைத்துஅணுகவேண்டியதன் அவசியத்தைவலியுறுத்துகின்றது(Surangi et al., 2025).

இதன் அடிப்படையில், இவ்வாய்வுபெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளைவருமானஉருவாக்கம் மட்டுமன்றிபொருளாதாரஅதிகாரமளித்தலின் ஒருசெயல்முறையாகவும் அணுகுகின்றது.

5.9. சேமிப்புமற்றும் சொத்துரிமை

சேமிப்புஎன்பதுகுடும்பத்தின் குறுகியமற்றும் நடுத்தரகாலபொருளாதாரப் பாதுகாப்பிற்கானமுக்கியமானகருவியாகும்.பெண்களின் வருமானம் சேமிப்பாகமாற்றப்படும்போதுஎதிர்பாராதகுடும்பச் செலவுகள்,கல்வி,சுகாதாரம் மற்றும் எதிர்காலமுதலீடுகளுக்குஅதுஉதவக்கூடும்.

ஆனால் சேமிப்பு இருப்பதுமட்டுமேநீண்டகாலபொருளாதாரஅதிகாரமளித்தலைக் குறிக்காது. பெண்களின் பெயரில் நிலம்,வீடு,கால்நடை,உற்பத்திஉபகரணங்கள் அல்லதுபிறசொத்துக்கள் இருப்பதும் முக்கியமானதாகும்.எனவே, இவ்வாய்வில் சேமிப்புமற்றும் சொத்துரிமைஆகியவைபெண்களின் குடும்பப் பொருளாதாரநலனின் தனித்தனிகுறியீடுகளாகக் கருதப்படுகின்றன.

5.10. நிறுவனஆதரவுமற்றும் அபிவிருத்தித் தலையீடுகள்

பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளைஊக்குவிப்பதில் அரசநிறுவனங்கள்,அரசசார்பற்றநிறுவனங்கள்,நிதிநிறுவனங்கள் மற்றும் சமூகஅமைப்புகள் முக்கியப் பங்குவகிக்கின்றன.

இலங்கையின் தேசியSMEகொள்கைச் சூழலில் பெண்களின் தொழில்முனைவோருக்குதிறன் மேம்பாடு,தொழில்முனைவோர் கலாசாரம்,நிதிஅணுகல் மற்றும் ஆதரவானசூழல் ஆகியவைமுக்கியமானகொள்கைப் பகுதிகளாகஅடையாளம் காணப்பட்டுள்ளன (OECD, 2021).

அதேவேளை, 2025ஆம் ஆண்டு இலங்கைத் தொடர்பானஆய்வுகள் நிறுவனஆதரவுபெண்களின் தொழில்முனைவோர் வளர்ச்சியில் முக்கியமானதாக இருப்பதைவலியுறுத்துகின்றன.

பெண்களுக்குபயிற்சிஅல்லதுஆரம்பநிதிஉதவிவழங்குவதோடுமட்டுமல்லாமல்,தொழில் வளர்ச்சியின் பல்வேறுகட்டங்களிலும் தொடர்ச்சியானஆதரவுவழங்கப்படவேண்டும்.

5.11. பெண்களின் தொழில்முனைவோர் நிலைத்தன்மை

பெண்களின் தொழில் வெற்றியைதொழில் தொடங்கியஎண்ணிக்கையால் மட்டும் மதிப்பிடமுடியாது. தொழில் எவ்வளவுகாலம் தொடர்கின்றது,வருமானம் நிலையானதா,சந்தைவிரிவடைகின்றதா,தொழில் சொத்துக்கள் உருவாகின்றனவாமற்றும் குடும்பப் பொருளாதாரத்தில் தொடர்ந்துபங்களிக்கின்றதாஎன்பதும் முக்கியமானதாகும். Rathnayaka மற்றும் Surangi (2022)கிராமப்புறப் பெண்கள் தொழிலைநீண்டகாலம் தொடர்வதில் பல்வேறுபாரம்பரியமற்றும் கட்டமைப்புதடைகளைஎதிர்கொள்வதாகக் கண்டறிந்துள்ளனர்.

இதனால்,களுவன்கேணி–02 பகுதியில் பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளைஆராயும்போதுதொழில் தொடக்கம் மற்றும் தொழில் நிலைத்தன்மைஆகிய இரண்டையும் தனித்தனியாகக் கருத்தில் கொள்வதுஅவசியமாகின்றது.

மேற்கண்டஇலக்கியமீளாய்வுகளின் அடிப்படையில், இலங்கையில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் தொடர்பாகபலஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அவைபெண்களின் தொழில் செயல்திறன்,நிதிஅணுகல்,தனிநபர் காரணிகள்,சமூக–கலாசாரதடைகள்,சந்தைப்படுத்தல் மற்றும் நிறுவனஆதரவுபோன்றஅம்சங்களைவிரிவாகஎடுத்துக்காட்டுகின்றன.

இருப்பினும்,மட்டக்களப்புமாவட்டத்தின் களுவன்கேணி–02 போன்றகுறிப்பிட்டகிராமஅலுவலர் பிரிவில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனுடன் எவ்வாறுதொடர்புபடுகின்றனஎன்பதுகுறித்துஉள்ளூர் சமூகமட்டத்தில் ஆய்வுகள் குறைவாகக் காணப்படுகின்றன. மேலும் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலன்,வருமானம்,சேமிப்புமற்றும் சொத்துரிமையில் ஏற்படுத்தும் பங்களிப்புகுறித்தஉள்ளூர் அளவிலானஆய்வுகள் குறைவாகஉள்ளன.

எனவே, இவ்வாய்வுபின்வரும் ஆய்வு இடைவெளியைநிரப்புகின்றது:

“பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகள் குடும்பப் பொருளாதாரநலனுக்குபங்களிப்பைவழங்குகின்றனவா?”என்பதைக் கடந்து,அந்தப் பங்களிப்புஎந்தவடிவங்களில் வெளிப்படுகின்றது,அதன் நிலைத்தன்மையைசமூக,பொருளாதாரமற்றும் நிறுவனகாரணிகள் எவ்வாறுபாதிக்கின்றனஎன்பதையும் களுவன்கேணி–02 சமூகச் சூழலில் ஆராய்வதே இவ்வாய்வின் தனித்துவமானபங்களிப்பாகும்.

6. கலந்துரையாடலும் முடிவுகளும்

6.1. பெண்களின் சுயதொழில் நிலை


ஆய்வில் பங்கேற்றபெண்களில்:

அட்டவணை: 6.1

தொழில் நிலை	சதவீதம்
சுயதொழிலில் ஈடுபட்டோர்	43%
தொழிலின்றி இருப்போர்	57%

மூலம்: கள ஆய்வு, 2026

வரைபடம்: 6.1



இந்த கட்டுரையில் இருக்கின்ற பொறுப்பு ஆவார்

மூலம்: கள ஆய்வு, 2026

43%பெண்கள் சுயதொழிலில் ஈடுபட்டிருந்தாலும், 57%பெண்கள் தொழிலின்றி இருப்பதுகுறிப்பிடத்தக்ககண்டுபிடிப்பாகும்.

இதன் மூலம் பெண்களுக்குதொழில்முனைவோர் வாய்ப்புகள் உருவாகியிருந்தாலும்,அந்தவாய்ப்புகள் அனைத்துபெண்களுக்கும் சமமாகவும் நிலையானதாகவும் மாறவில்லைஎன்பதுதெளிவாகிறது.

பெண்களின் தொழில்கள் பெரும்பாலும் சிறுஅளவிலான,குடும்பஅடிப்படையிலானமற்றும் உள்ளூர் சந்தையைச் சார்ந்தநடவடிக்கைகளாகக்காணப்படுகின்றன.

6.2. குடும்பமாதவருமானம்

அபிவிருத்தித் தலையீடுகளில் பங்கேற்பதற்குமுன்னர் 78%பெண்களின் குடும்பமாதவருமானம் ரூ.15,000-க்கும் குறைவாக இருந்தது.

தலையீடுகளில் பங்கேற்றபின்னர் 58% பெண்கள் குடும்பமாதவருமானம் அதிகரித்ததாகதெரிவித்தனர்.

அட்டவணை: 6.2.

குறியீடு	சதவீதம்
திட்டத்திற்குமுன் ரூ.15,000-க்கும் குறைவானகுடும்பவருமானம்	78%
திட்டத்திற்குப் பின் வருமானம் அதிகரித்ததாகதெரிவித்தோர்	58%

மூலம்: கள ஆய்வு, 2026

இந்தமாற்றம் பெண்களின் பொருளாதாரநடவடிக்கைகள் குடும்பத்தின் வருமானநிலையைமேம்படுத்தும் திறன் கொண்டுள்ளதைகாட்டுகின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டமுந்தையஆய்வுகளும் பெண்களின் வருமானஉருவாக்கநடவடிக்கைகள் குடும்பநலனுக்குமுக்கியமானபங்களிப்பைவழங்குவதாகக் காட்டுகின்றன. Wickramasinghe (1993),கிராமப்புறப் பெண்களின் வருமானத்தின் பெரும்பகுதிகுடும்பநலனுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கண்டறிந்தார்.

6.3. தொழிற்பயிற்சிமற்றும் தொழில் தொடர்ச்சி

பெண்களின் தொழில்முனைவோர் வளர்ச்சியில் தொழிற்பயிற்சிமுக்கியமானதாக இருந்தாலும்,பயிற்சியைநிலையானதொழிலாகமாற்றுவதில் சவால்கள் காணப்படுகின்றன.

ஆய்வுத் தரவின்படி, 15%பெண்கள் மட்டுமேதொழிற்பயிற்சிக்குப் பின்னர் புதியதொழில் அல்லதுவேலைவாய்ப்பைஆரம்பித்துள்ளனர்.

மேலும், 40%பெண்கள் மட்டுமேசுயதொழிலைத் தொடர்ந்துமேற்கொண்டுள்ளனர்.

இதனால்தொழிற்பயிற்சி→தொழில் ஆரம்பித்தல் →தொழில் தொடர்ச்சி→நிலையானவருமானம்என்றசெயல்முறையின் ஒவ்வொருகட்டத்திலும் ஆதரவுதேவைப்படுகின்றது.

இலங்கையில் பெண்கள் தொழில்முனைவோர் தொடர்பானஆய்வுகளும் வணிகஅறிவு,மனித மூலதனம்,நிதிமற்றும் குடும்பப் பொறுப்புகள் போன்றகாரணிகள் தொழில் தொடர்ச்சியைப் பாதிப்பதாகக் காட்டுகின்றன.

6.4. சேமிப்புநிலை

பெண்களின் பொருளாதாரநலனில் சேமிப்புமுக்கியமானவிடயமாகும்

ஆய்வில் 56% பெண்களிடம் சேமிப்புப் பழக்கம் காணப்பட்டது.

இதுபெண்களின் வருமானநடவடிக்கைகள் சிலசந்தர்ப்பங்களில் எதிர்காலபொருளாதாரப் பாதுகாப்புக்காகசேமிப்பாகமாற்றப்படுவதைகாட்டுகின்றது.எனினும், 44%பெண்களிடம் நிலையானசேமிப்பு

இல்லைஅல்லதுபோதுமானசேமிப்புஉருவாகவில்லைஎன்பதுபெண்களின் பொருளாதாரபாதுகாப்பில் இன்னும் சவால் இருப்பதைவெளிப்படுத்துகின்றது.

6.5. சொத்துரிமை

சொத்துரிமைபெண்களின் நீண்டகாலபொருளாதாரஅதிகாரமளித்தலின் முக்கியமானவிடயமாகும்

ஆய்வில் 20%பெண்களிடம் மட்டுமேசொத்துரிமைகாணப்பட்டது.

இதன் பொருள்,பெண்களின் வருமானத்தில் மாற்றம் ஏற்பட்டாலும்,அந்தமாற்றம் பெண்களின் பெயரில் நீண்டகாலசொத்தாகமாறுவதில் குறிப்பிடத்தக்கவரம்புஉள்ளது.

இதனால்வருமானஉருவாக்கம் ≠முழுமையானபொருளாதாரஅதிகாரமளித்தல்என்றகருத்தை இவ்வாய்வுவலுப்படுத்துகின்றது.

Wijewardhanaமற்றும் Dias ஆகியோர் பொருளாதாரஅதிகாரமளித்தலைவளங்களுக்கானஅணுகல்,பாதுகாப்புமற்றும் முடிவெடுக்கும் அதிகாரத்துடன் இணைத்துவிளக்குகின்றனர்.

6.6. குடும்பப் பொருளாதாரநலன்

இவ்வாய்வில் குடும்பப் பொருளாதாரநலன் பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் புரிந்துகொள்ளப்பட்டது:

- குடும்பவருமானம்
- சுயதொழில்
- வேலைவாய்ப்பு
- சேமிப்பு
- சொத்துரிமை
- குடும்பத் தேவைகளைப் பூர்த்திசெய்தல்
- வாழ்வாதாரமேம்பாடு
- பொருளாதாரமுடிவெடுப்பு

இந்தவிடயங்களின் அடிப்படையில் பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகள் குடும்பத்தின் பொருளாதாரநலனில் நேர்மறையானபங்களிப்பைவழங்குகின்றன.

ஆனால் அந்தப் பங்களிப்பு இன்னும் நிலையானமற்றும் முழுமையானபொருளாதாரஅதிகாரமளித்தலாகமாற்றப்படவில்லை.

6.7. சந்தைஅணுகல்

பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளின் நிலைத்தன்மைக்குசந்தைஅணுகல் முக்கியமானதாகும்.

உள்ளூர் சந்தையில் மட்டுமேபொருட்களைவிற்பனைசெய்வதுபெண்களின் தொழில் விரிவாக்கத்தைகட்டுப்படுத்தக்கூடும்.

UNDP ஆய்வுகள் பெண்கள் தொழில்முனைவோருக்குசந்தை,தகவல்,நிதிமற்றும் பயிற்சிஅணுகல் முக்கியமானபிரச்சினைகள் என்பதைசுட்டிக்காட்டுகின்றன.

எனவே,களுவன்கேணி–02 பெண்களின் உற்பத்திப் பொருட்களுக்குபரந்தசந்தைவாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும்.

6.8. குடும்பஆதரவுமற்றும் பால்நிலைப்பங்குகள்

பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளைகுடும்பப் பொறுப்புகளிலிருந்துதனியாகப் பார்க்கமுடியாது.

பெண்கள்:

- குழந்தைப் பராமரிப்பு
- சமையல்
- வீட்டுவேலை
- முதியோர் பராமரிப்பு
- குடும்பநலப் பொறுப்புகள்

போன்றபணிகளையும் மேற்கொள்வதால் தொழில் நடவடிக்கைகளுக்கான நேரம் குறைக்கப்படலாம்.

Rathnayaka மற்றும் Surangi (2022) ஆய்வும் குடும்பம் மற்றும் தொழிலைசமநிலைப்படுத்துதல்,பாலினப் பாகுபாடுமற்றும் கலாசாரகாரணிகள் கிராமப்புறப் பெண்களின் தொழில்முனைவோருக்குமுக்கியதடைகளாக இருப்பதைகண்டறிந்துள்ளது.

6.9. நிறுவனமற்றும் நிதிஆதரவு

பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகள் வளர்வதற்குஆரம்பஉதவிமட்டும் போதுமானதல்ல.பயிற்சி,நிதி,சந்தை,தொழில்நுட்பம்,கண்காணிப்பு,நிறுவனஆதரவுஎன்றஒருங்கிணைந்தஆதரவுமுறைதேவப்படுகின்றது.

UNDP-யின் சமீபத்தியஆய்வுகள் பெண்களால் நடத்தப்படும் MSME-களுக்கானநிதிஅணுகலில் கட்டமைப்புதடைகள் இருப்பதைவலியுறுத்துகின்றன.

7. ஆய்வின் முடிவுகள் (Findings)

இவ்வாய்வின் முடிவுகளாகபின்வருவனவற்றைஅடையாளப்படுத்தலாம்.

1. 43%பெண்கள் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளனர்,அதேவேளை 57%பெண்கள் தொழிலின்றிஉள்ளனர்.
2. பெண்களின் தொழில்கள் பெரும்பாலும் சிறியஅளவிலானமற்றும் குடும்பஅடிப்படையிலானதொழில்களாகக்காணப்படுகின்றன.
3. அபிவிருத்தித் தலையீடுகளுக்குமுன்னர் 78%குடும்பங்களின் மாதவருமானம் ரூ.15,000-க்கும் குறைவாக இருந்தது.
4. திட்டங்களில் பங்கேற்றபின்னர் 58%பெண்கள் குடும்பமாதவருமானம் அதிகரித்ததாகதெரிவித்துள்ளனர்.
5. தொழிற்பயிற்சிக்குப் பின்னர் புதியதொழில் அல்லதுவேலைவாய்ப்பைஆரம்பித்தவர்கள் 15%மட்டுமே.
6. 40%பெண்கள் மட்டுமேசுயதொழிலைத் தொடர்ந்துமேற்கொண்டுள்ளனர்.
7. 56%பெண்களிடம் சேமிப்புப் பழக்கம் காணப்பட்டது.
8. 20%பெண்களிடம் மட்டுமேசொத்துரிமைகாணப்பட்டது.
9. பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகள் குடும்பவருமானம் மற்றும் வாழ்வாதாரத்திற்குநேர்மறையானபங்களிப்பைவழங்குகின்றன.
10. வருமானஅதிகரிப்பு இருந்தபோதிலும்,சொத்துரிமைமற்றும் நீண்டகாலபொருளாதாரப் பாதுகாப்புகுறைவாகஉள்ளது.
11. தொழில் தொடர்ச்சியைசந்தைஅணுகல்,நிதி,பயிற்சி,குடும்பஆதரவுமற்றும் நிறுவனஆதரவுபாதிக்கின்றன.
12. பெண்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகளைநிலையானபொருளாதாரஅதிகாரமளித்தலாகமாற்றுவதற்குதொடர்ச்சியானஆதரவுஅவசியமாகிறது.

8. முடிவுரை(Conclusion)

இவ்வாய்வு,மட்டக்களப்புமாவட்டத்தின் களுவன்கேணி–02 கிராமஅலுவலர் பிரிவில் பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனுக்குகுறிப்பிடத்தக்கபங்களிப்பைவழங்குகின்றனஎன்பதைவெளிப்படுத்துகின்றது.அபிவிருத்தித் தலையீடுகளில் பங்கேற்பதற்குமுன்னர் 78%பெண்களின் குடும்பமாதவருமானம் ரூ.15,000-க்கும் குறைவாக இருந்தநிலையில்,பங்கேற்புக்குப் பின்னர் 58% பெண்கள் குடும்பவருமானம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.இதுபெண்களின் தொழில்முனைவோர் மற்றும் வாழ்வாதாரநடவடிக்கைகள் குடும்பவருமானத்தைமேம்படுத்தும் திறன் கொண்டுள்ளதைகாட்டுகின்றது.

அதேவேளை, 43%பெண்கள் சுயதொழிலில் ஈடுபட்டிருந்தாலும், 57%பெண்கள் தொழிலின்றி இருப்பதுபெண்களின் பொருளாதாரப் பங்கேற்பில் இன்னும் குறிப்பிடத்தக்க இடைவெளி இருப்பதைவெளிப்படுத்துகின்றது. மேலும்,தொழிற்பயிற்சிக்குப் பின்னர் புதியதொழில் ஆரம்பித்தவர்கள் 15%மட்டுமேஎன்பதும், 40% பெண்கள்

மட்டுமேசுயதொழிலைத் தொடர்ந்துமேற்கொண்டிருப்பதும் தொழிலின் நிலைத்தன்மைஒருமுக்கியசவாலாக இருப்பதைகாட்டுகின்றது.

56% பெண்களிடம் சேமிப்புகாணப்பட்டாலும்,சொத்துரிமை 20%மட்டுமே இருப்பதுமிகவும் முக்கியமானகண்டுபிடிப்பாகும்.இதன் மூலம் பெண்களின் பொருளாதாரநடவடிக்கைகள் குடும்பவருமானத்தைஅதிகரித்தாலும்,அந்தவருமானம் பெண்களின் நீண்டகாலபொருளாதாரப் பாதுகாப்புமற்றும் சொத்துரிமையாகமாற்றப்படுவதில் வரம்புகள் இருப்பதுதெளிவாகிறது.

எனவே, இவ்வாய்வானது''பெண்களின் தொழில்முனைவோர் செயல்பாடுகள் குடும்பப் பொருளாதாரநலனைமேம்படுத்துகின்றன் ஆனால் அவற்றைநிலையானமற்றும் முழுமையானபொருளாதாரஅதிகாரமளித்தலாகமாற்றுவதற்குநிதி,சந்தை,திறன் மேம்பாடு,நிறுவனஆதரவு,சொத்துரிமைமற்றும் முடிவெடுக்கும் அதிகாரம் ஆகியவைஒருங்கிணைந்துவலுப்படுத்தப்படவேண்டும்.''

இதனால்,பெண்களின் பொருளாதாரநலனைவெறும் ''வருமானஅதிகரிப்பு''என்றஒரேகுறியீட்டின் அடிப்படையில் மதிப்பிடாமல்,வருமானம்,வேலைவாய்ப்பு,சேமிப்பு,சொத்துரிமை,குடும்பமுடிவெடுப்பு,தொழில் நிலைத்தன்மை,பொருளாதாரப் பாதுகாப்புஎன்றபலபரிமாணங்களின் அடிப்படையில் மதிப்பிடுவதுஅவசியமாகின்றது.

உசாத்துணைநூற்பட்டியல்

[1] De Mel, S., McKenzie, D., & Woodruff, C. (2014). Business training and female enterprise start-up, growth, and dynamics: Experimental evidence from Sri Lanka. *Journal of Development Economics, 106*, 199–210. https://doi.org/10.1016/j.jdeveco.2013.09.005
[2] De Silva, D. C. H., & Wijewardene, L. (2019). A literature review on individual factors affecting the business performance of women entrepreneurs in Sri Lanka. *International Journal of Accounting and Business Finance, 5*(1), 45–59. https://doi.org/10.4038/ijabf.v5i1.38
[3] International Finance Corporation (IFC). (2020). *Gendered impacts of COVID-19 on small and medium-sized enterprises in Sri Lanka*. World Bank Group.
[4] Nimeshi, G. K. S., & Rodrigo, M. (2024). Barriers for women entrepreneurship operating in the SME sector Sri Lanka. *Journal of Business and Technology, 8*(1), 1–13. https://doi.org/10.4038/jbt.v8i1.95
[5] OECD. (2021). *Sri Lanka: Entrepreneurship policies through a gender lens*. OECD.
[6] Rathnayaka, G. M. K., & Surangi, H. A. K. N. S. (2022). Constraints faced by rural female entrepreneurs in Sri Lanka: A study based on Nuwara Eliya District. *Journal of Business Studies, 9*(1), 57–76. https://doi.org/10.4038/jbs.v9i1.86
[7] Shahila, Y., &Kajendra, K. (2021). Factors influencing financial performance of rural women entrepreneurs in Northern Sri Lanka. *Proceedings of the International Conference on Business Management, 17*. https://doi.org/10.31357/icbm.v17.5255
[8] Shanmugathas, S. (2021). Entrepreneurial marketing dimensions: Evidence from women-owned SMEs in Sri Lanka. *Sri Lanka Journal of Marketing, 7*(3), 181–211. https://doi.org/10.4038/sljmuok.v7i3.79
[9] Surangi, H. A. K. N. S., Wijetunge, W. A. D. S., & Samarakoon, S. M. A. K. (2025). Reframing support: Institutional perspectives on female entrepreneurship development in Sri Lanka. *SAGE Open*. https://doi.org/10.1177/21582440251396389
[10] United Nations Development Programme (UNDP). (2025). *Unlocking challenges: Empowering women-owned MSMEs in Sri Lanka for inclusive economic growth*. UNDP Sri Lanka.
[11] United Nations Development Programme. (2016). *Trade winds of change: Women entrepreneurs on the rise in South Asia*. UNDP.
[12] Wickramasinghe, A. (1993). Development intervention and the changing status of rural women in Sri Lanka. *Geoforum, 24*(1), 63–69. https://doi.org/10.1016/0016-7185(93)90015-A
[13] Wijewardhana, B. V. N., & Dias, M. M. M. (2022). Enhancing rural women empowerment in Sri Lanka. *International Journal of Governance and Public Policy Analysis, 3*(1). https://doi.org/10.31357/ijgppa.v3i01.5578
[14] World Bank. (2024). *Sri Lanka Development Update 2024*. World Bank.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்